**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 87/2024**
**Examination of PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | உண்ணாமலை |
| **Husband's Name** | : | சுப்பிரமணி |
| **Village** | : | சிறுகடம்பூர் |
| **Taluk** | : | செஞ்சி |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 69 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 19.08.2025**

**வாதி தரப்பில் சாட்சியம்:**

நான் செஞ்சி சிறுகடம்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து 1/3 பாகம் பெறவேண்டி பரிகாரம் கோரியுள்ளேன் மற்றும் 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் 2246/2008 ஆவணம் செல்லாது மற்றும் இல்லா நிலைய செய்யவேண்டும் என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் மற்றும் 10.02.2021ம் தேதி 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் 319/2021ம் செல்லாது என்றும் இல்லா நிலை என்றும் விளம்புகை செய்யவேண்டியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு வழக்கினை நிருபணம் செய்வதற்காக நிருபண ஆணை உறுதி ஆவணம் தாக்கல் செய்கிறேன். நிருபண ஆனை உறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள பெருவிரல் ரேகை என்னுடையது தான். எனது தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள் 12.03.1955-ல் திருமதி. கோவிந்தம்மாள் அவர்கள் பெயருக்கு திரு. குள்ளப்ப செட்டி அவர்கள் எழுதிக் கொடுத்த பதிவு விற்பனை ஆவணம் சான்றிட்ட உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.1** ஆகும். 23.10.1958-ல் திரு. பூங்காவன செட்டி அவர்கள் பெயருக்கு, திருமதி. கோவிந்தம்மாள் அவர்கள் எழுதிக்கொடுத்த பதிவு தானச்செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட பதிவு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.2** ஆகும். 30.10.2008-ல் 4ம் பிரதிவாதி திரு. ஏழுமலை அவர்கள் பெயருக்கு, 2ம் பிரதிவாதியின் குமாரர் (லேட்)ஏழுமலை அவர்கள் எழுதிக்கொடுத்த பதிவு விற்பனை ஆவணம் சான்றிட்ட பதிவு உண்மை நகல் தாக்கல்

செய்கிறேன். அது **வா.சா.ஆ.3** ஆகும். 10.02.2021-ல் 1ம் பிரதிவாதி திரு. ஆனந்தன் அவர்கள் பெயருக்கு, 2ம் பிரதிவாதி திரு. சுப்பிரமணியன் அவர்கள் எழுதிக்கொடுத்த பதிவு விற்பனை ஆவணம் சான்றிட்ட பதிவு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.4** ஆகும். 06.03.2021-ல் வழக்கு சொத்துச் சம்மந்தப்பட்டதில் 5ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவான வில்லங்க விபரத்தை அறிந்து வாதி தாக்கல் செய்த வில்லங்கச் சான்று சான்றிட்ட பதிவு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.5** ஆகும். 23.11.1997-ல் இறந்து போன வாதியின் தகப்பனார் திரு. பூங்காவன செட்டி அவர்களது இறப்புச் சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.6** ஆகும். வாதியின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.7** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை** – பிரதிவாதித் தரப்பு வழக்கறிஞர் அவகாசரம் கோரியதன் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்